**கவனிக்க**.- 2011.01.07 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி III பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1689 - 2011 ජනවාරි මස 14 වැනි සිකුරාදා - 2011.01.14

*1689 ஆம் இலக்கம் – 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 37 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, *அதாவது 2011, சனவரி மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2011, சனவரி மாதம் 07 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இளைஞர் அலுவல்கள், திறன் அபிவிருத்தி அமைச்சு

தொழினுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களம்

### இலங்கைத் தொழினுட்பக் கல்விச் சேவையின் வகுப்பு III (விசேட பதவியணி) இல் உள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை -2011

தொழினுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களத்தில் உள்ள இலங்கை தொழில்னுட்பக் கல்விச் சேவையின் வகுப்பு III (விசேட பதவியணி) இதன்கீழ் அட்டவணைப்படுத்தப்பட்ட கீழ்க்குறித்த பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன : -

பதவிகளின் விபரங்கள் :

| பதவி எண் | |
|---|---|
| 1 | இலத்திரனியல் போதனாசிரியர் |
| 2 | கட்டிடத் தொழில் போதனாசிரியர் |
| 3 | மோட்டார் பொறிநுட்ப போதனாசிரியர் |
| 4 | மரவேலை போதனாசிரியர் |
| 5 | குளிரேற்றல் மற்றும் வளிச்சீராக்கல் போதனாசிரியர் |
| 6 | தொழினுட்ப வரைதல் போதனாசிரியர் |
| 7 | மின் தொழிற்துறை போதனாசிரியர |
| 8 | ஆங்கிலப் போதனாசிரியர் |
| 9 | கணனி தொழினுட்பவியல் போதனாசிரியர் |
| 10 | விஞ்ஞான மற்றும் கணித போதனாசிரியர் |
| 11 | வர்த்தக போதனாசிரியர் |
| 12 | உலோக வேலை போதனாசிரியர் |

விண்ணப்பம் இலக்கம் 1-6 வரை முதலாம் பக்கத்திலும், இல. 7-12 வரை இரண்டாம் பக்கத்திலும், எஞ்சியுள்ளவை 3 ஆம் பக்கத்திலும் இருக்குமாறு மாதிரிக்கமைய தயாரிக்கப்பட்டும் வேட்பாளரின் சொந்தக் கையெழுத்திலும் பரீட்சையின் மொழி மூலத்திலும் உரிய விவரங்களைத் தெளிவாகக் கொண்டும் இருத்தல் வேண்டும். மாதிரி விண்ணப்பத்துடன் இணங்காததும் பூரணமற்ற விவரங்களைக் கொண்டதுமான விண்ணப்பம் அறிவிக்கப்படாமல் நிராகரிக்கப்படும். விண்ணப்பத்தின் ஒரு ஒளிப்பிரதியை வைத்திருத்தல் பயனுள்ளதாகும். விண்ணப்பதாரர்களால் நிரப்பப்பட்ட விண்ணப்பம் பரீட்சை அறிவிப்பில் குறித்த மாதிரி விண்ணப்பத்துடன் இணங்குகின்றதா என்பதைச் செவ்வை பார்க்க வேண்டும். இல்லையெனின், விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம்.

விண்ணப்பத்தைத் தயாரிக்கும்போது தலைப்பில் குறிப்பிட்ட பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பங்களில் சிங்களத்துக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் எழுதப்பட வேண்டும்.

கீழே தரப்பட்ட மாதிரியில் அமைந்த படிவத்திலான விண்ணப்பங்கள் "கொழும்பு 10, அ. பெ. எண். 557, தொழினுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களம், பணிப்பாளர் நாயகம்" இற்கு 2011.02.14 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாகப் பதிவு அஞ்சலில் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பத்தைக் கொண்ட கடித உறையின் மேல் இடதுகை மூலையில் "இலங்கை தொழினுட்பக் கல்விச் சேவையின் வகுப்பு III இல் (விசேட பதவியணி) உள்ள பதவிகள்" எனக் குறித்திருத்தல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணபிக்கும் வேட்பாளர்கள் விண்ணப்பிக்கும் ஒவ்வொரு பதவிக்குமான முன்னுரிமைக்கு அமைய பதவி எண்களையும் பதவிகளையும் குறிப்பிட்டு விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும். வர்த்தமானி அறிவிப்புக்கேற்ப அடிப்படைத் தகைமைகளை உடையவர்கள் மாத்திரம் எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

2. **தொழில் நியதிகள்**.- (அ) இப்பதவிகள் நிரந்தரமானதும், ஓய்வூதியமுள்ளதுமாகும். தெரிந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் "விதவைகள் அநாதைகள்" ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகை அளிக்க வேண்டியதோடு மூன்றாண்டு தகுதிகாண் நிலையில் இடப்படுவார்.

(ஆ) வினைத்திறன்காண் தடை.- பொது நிர்வாகச் சுற்றுநிருபம் இல. 20/2001 இற்கமைய ஒரு பதவிக்கு நியமிக்கப்படும் ஒவ்வோர் அலுவலரும் சம்பள அளவுத்திட்டத்தின் 4 ஆம் படிக்கு முன்பாக 1 ஆம் வினைத்திறன்காண் தடையையும் 7 ஆம் படிக்கு முன்பாக 2 ஆம் வினைத்திறன்காண் தடையையும் பூர்த்திசெய்ய வேண்டும். விதித்த காலத்தினுள்ளே வினைத்திறன்காண் தடையைப் பூர்த்திசெய்யத் தவறுதலின் விளைவாகச் சம்பள ஏற்றம் பின்போடப்படும். அதேவேளை அனுமதிக்கப்பட்ட காலத்திற்கு மிகையாக எடுக்கப்படும் காலம் சம்பள ஏற்றம் பின்போடப்படும் காலமாகக் கருதப்படும். இவ்வலுவலர்கள் வினைத்திறன்காண் தடையைப் பூர்த்தி செய்யும் வரைக்கும் இலங்கை தொழினுட்பக் கல்விச் சேவையினுள்ளே எவ்வுயர் பதவிக்கும் விண்ணப்பிக்கும் தகவில்லாதவர்களாகவும் அமைவர்.

(இ) இப்பதவிகளுக்கு நியமிக்கப்படும் அலுவலர்கள் பொது நிருவாகச் சுற்றுநிருபம் இல. 07/2007 இற்கமைய நியமனத் திகதியிலிருந்து 5 ஆண்டுகளினுள்ளே இரண்டாம் மொழியிலான தேர்ச்சியைப் பெறுமாறு எதிர்பார்க்கப்படுவர். விதித்த காலத்தினுள்ளே இரண்டாம் மொழியில் தேர்ச்சியைப் பூர்த்திசெய்யத் தவறுதலின் விளைவாகச் சம்பள ஏற்றம் பின்போடப்படும். இவ்வலுவலர்களின் மொழித்தேர்ச்சி பிரதான பாடமாக

(2 ஆம் மொழியாகவோ, விருப்பத்திற்குரிய பாடமாகவோ இருத்தலாகாது) க. பொ. த. (சா. த.) இல் சிங்களத்தில்/தமிழில் சித்தியும் அரச கரும மொழிகள் சித்தியும் அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் நடத்தப்படும். வாய்மொழிப் பரீட்சையில் சித்தியும் அல்லது அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் நடத்தப்படும் விசேட திறன் பரீட்சையில் சித்தியும் ஆகும்.

3. **சம்பளமும் படிகளும்**.- இப்பதவிக்குரிய மாதத் திரட்டிய சம்பள அளவுத்திட்டம் ரூபா 22,935-645X10-790X8-1,050X17- ரூபா 53,555 ஆகும். பொது நிர்வாகச் சுற்றுநிருபம் இல. 6/2006 இன் SL-1-2006 இற்கேற்ப கொடுப்பனவுகள் செய்யப்படும். மேலே பந்தி 2 (ஆ) இல் குறித்துரைத்த வினைத்திறமைகாண் தடையை பூர்த்திசெய்தலுக்கமைய சம்பள ஏற்றக் கொடுப்பனவு அமையும்.

4. **தகைமைகள்**.- ஒவ்வொரு விண்ணப்பதாரியும் விண்ணப்ப முடிவுத் திகதியில் பின்வரும் தகைமைகளைப் பூர்த்திசெய்ய வேண்டும் :-

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
(ஆ) சிறந்த ஒழுக்கப் பண்பைக் கொண்டும் உடல் ரீதியில் தகுதியாகவும் இருத்தல் வேண்டும்.
(இ) விண்ணப்ப முடிவுத் திகதியில் 21 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
(ஈ) ஒவ்வொரு பதவிக்கும் கீழே குறிப்பிட்ட வாண்மைத் தொழில்/கல்வித் தகைமைகளையும் உரிய அனுபவத்தையும் கொண்டிருக்க வேண்டும்.

**குறிப்பு**.- விண்ணப்பங்கள் 2009.03.06 ஆந் திகதி வர்த்தமானி அறிவிப்புக்கேற்ப அனுப்பப்பட வேண்டும். மேல் வயதெல்லை அவர்களுக்குப் பொருந்தாது. (உயர் நீதிமன்றத்தின் வழக்கு இல. எஸ்சீ 235/2009/எப்ஆர் இன் சட்ட நடவடிக்கைகள்).

5. **கல்வி, வாண்மைத் தொழிற் தகைமைகள்** :

5.1 இலத்திரனியல் போதனாசிரியர் :

(i) தொழினுட்பவியலிலான தேசிய டிப்ளோமா (இலத்திரனியலும் தொடர்பாடலும்)

அல்லது

(ii) எந்திரவியலிலான உயர் தேசிய டிப்ளோமா (மின் எந்திரவியல்-இலத்திரனியல்)

அல்லது

(iii) தொழினுட்பவியலிலான தேசிய சான்றிதழ் (மின், இலத்திரனியல் எந்திரவியல்)

அல்லது

(iv) லண்டன் சிற்றி அன்ட் கில்ட் நிறுவனத்தின் (உரிய துறையிலான) முழுத் தொழினுட்பவியல் சான்றிதழ்

அத்துடன்

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் சிங்களமும்/தமிழ் மொழியும் கணிதமும்/எண்கணிதமும் உட்பட ஆறு (06) பாடங்கள்

அல்லது

(v) உரிய துறையில் சமானமான அல்லது உயர் அங்கீகரித்த தொழினுட்ப மட்டத் தகைமைகள் (பொது நிருவாக அமைச்சினாலும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தகைமைகள்.)

அத்துடன்

மேற்குறித்த தகைமைகளில் ஒன்றுடன் உரிய துறையில் ஐந்து ஆண்டு கற்பித்தல் அத்துடன்/அல்லது செய்முறை அனுபவம்

5.2 கட்டடத் தொழிற்றுறைப் போதனாசிரியர் :

(i) தொழினுட்பவியலிலான தேசிய டிப்ளோமா (குடிசார் எந்திரவியல்)

அல்லது

(ii) எந்திரவியலிலான உயர் தேசிய டிப்ளோமா (குடிசார் எந்திரவியல்)

அல்லது

(iii) தொழினுட்பவியலிலான தேசிய சான்றிதழ் (குடிசார் எந்திரவியல்)

அல்லது

(iv) லண்டன் சிற்றி அன்ட் கில்ட் நிறுவனத்தின் (உரிய துறையிலான) முழுத் தொழினுட்பவியல் சான்றிதழ்

அத்துடன்

க.பொ.த. (சா. த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் சிங்களமும்/தமிழ் மொழியும் கணிதமும்/எண்கணிதமும் உட்பட ஆறு (06) பாடங்கள்

அல்லது

(v) உரிய துறையில் சமமான அல்லது உயர் அங்கீகரித்த தொழில்னுட்ப மட்டத் தகைமைகள் (பொது நிர்வாக அமைச்சினாலும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தகைமைகள்.)

அத்துடன்

மேற்குறித்த தகைமைகளில் ஒன்றுடன் உரிய துறையில் ஐந்து ஆண்டு கற்பித்தல் அத்துடன்/அல்லது செய்முறை அனுபவம்

5.3 *மோட்டார் பொறிநுட்ப போதனாசிரியர் :*

(i) தொழினுட்பவியலிலான தேசிய டிப்ளோமா (பொறிமுறை எந்திரவியல்-மோட்டார் பொறிநுட்பம்)

அல்லது

(ii) எந்திரவியலிலான உயர் தேசிய டிப்ளோமா (பொறிமுறை எந்திரவியல்-மோட்டார் பொறிநுட்பம்)

அல்லது

(iii) தொழினுட்பவியலிலான தேசிய சான்றிதழ் (பொறிமுறை எந்திரவியல்)

அல்லது

(iv) லண்டன் சிற்றி அன்ட் கில்ட் நிறுவனத்தின் (உரிய துறையிலான) தொழினுட்பவியல் சான்றிதழ்

அத்துடன்

க.பொ.த. (சா.த) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் சிங்களமும்/தமிழ் மொழியும் கணிதமும்/எண்கணிதமும் உட்பட ஆறு (06) பாடங்கள்

அல்லது

(v) உரிய துறையில் சமமான அல்லது உயர் அங்கீகரித்த தொழினுட்ப மட்டத் தகைமைகள் (பொது நிர்வாக அமைச்சினாலும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தகைமைகள்.)

அத்துடன்

மேற்குறித்த தகைமைகளில் ஒன்றுடன் உரிய துறையில் ஐந்து ஆண்டு கற்பித்தல் அத்தடன்/அல்லது செய்முறை அனுபவம்.

5.4 *மரவேலைப் போதனாசிரியர் :*

(i) தொழினுட்பவியலிலான தேசிய டிப்ளோமா (பொறிமுறை எந்திரவியல்-குடிசார் எந்திரவியல்)

அல்லது

(ii) எந்திரவியலிலான உயர் தேசிய டிப்ளோமா (பொறிமுறை-குடிசார் எந்திரவியல்)

அல்லது

(iii) தொழினுட்பவியலிலான தேசிய சான்றிதழ் (குடிசார் எந்திரவியல்-பொறிமுறை எந்திரவியல்)

அல்லது

(iv) லண்டன் சிற்றி அன்ட் கில்ட் நிறுவனத்தின் (உரிய துறையிலான) முழுத் தொழினுட்பவியல் சான்றிதழ்

அத்துடன்

க.பொ.த. (சா. த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் சிங்களமும்/ தமிழ் மொழியும் கணிதமும் எண்கணிதமும் உட்பட ஆறு (06) பாடங்கள்

அல்லது

(v) உரிய துறையில் சமமான அல்லது உயர் அங்கீகரித்த தொழினுட்பமட்டத் தகைமைகள் (பொது நிர்வாக அமைச்சினாலும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தகைமைகள்.)

அத்துடன்

மேற்குறித்த தகைமைகளில் ஒன்றுடன் உரிய துறையில் ஐந்து ஆண்டு கற்பித்தல் அத்துடன்/அல்லது செய்முறை அனுபவம்.

5.5 *குளிரேற்றலிலும் வளிச்சீராக்கலிலுமான போதனாசிரியர் :*

(i) தொழினுட்பவியலிலான தேசிய டிப்ளோமா (பொறிமுறை/உற்பத்தி எந்திரவியல்)

அல்லது

(ii) எந்திரவியலிலான உயர் தேசிய டிப்ளோமா (பொறிமுறை எந்திரவியல் - குளிரேற்றலும் வளிச்சீராக்கலும்)

அல்லது

(iii) தொழினுட்பவியலிலான தேசிய சான்றிதழ் (பொறிமுறை எந்திரவியல்)

அல்லது

(iv) லண்டன் சிற்றி அன்ட் கில்ட் நிறுவனத்தின் (உரிய துறையிலான) முழுத் தொழினுட்பவியல் சான்றிதழ்

அத்துடன்

க.பொ.த. (சா. த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் சிங்களமும்/தமிழ் மொழியும் கணிதமும்/எண்கணிதமும் உட்பட ஆறு (6) பாடங்கள்

அல்லது

(v) உரிய துறையில் சமானமான அல்லது உயர் அங்கீகரித்த தொழினுட்பமட்டத் தகைமைகள் (பொது நிர்வாக அமைச்சினாலும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தகைமைகள்).

அத்துடன்

மேற்குறித்த தகைமைகளில் ஒன்றுடன் உரிய துறையில் ஐந்து ஆண்டு கற்பித்தல் அத்துடன்/அல்லது செய்முறை அனுபவம்.

5.6 தொழினுட்ப வரைதலிலான போதனாசிரியர் :

(i) தொழினுட்பவியலிலான தேசிய டிப்ளோமா (பொறிமுறை எந்திரவியல்)

அல்லது

(ii) எந்திரவியலிலான உயர் தேசிய டிப்ளோமா (பொறிமுறை எந்திரவியல்)

அல்லது

(iii) தொழினுட்பவியலிலான தேசிய சான்றிதழ் (பொறிமுறை எந்திரவியல்)

அல்லது

(iv) லண்டன் சிற்றி அன்ட் கீல்ட்ஸ் நிறுவனத்தின் (உரிய துறையிலான) முழுத் தொழினுட்பவியல் சான்றிதழ்

அத்துடன்

க.பொ.த. (சா . த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் சிங்களமும்/தமிழ் மொழியும் கணிதமும்/எண்கணிதமும் உட்பட (06) பாடங்கள்

அல்லது

(v) உரிய துறையில் சமமான அல்லது உயர் அங்கீகரித்த தொழினுட்பமட்டத் தகைமைகள் (பொது நிர்வாக அமைச்சினாலும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தகைமைகள்.)

அத்துடன்

மேற்குறித்த தகைமைகளில் ஒன்றுடன் உரிய துறையில் ஐந்து ஆண்டு கற்பித்தல் அத்துடன்/அல்லது செய்முறை அனுபவம்.

5.7 மின் தொழிற்றுறைப் போதனாசிரியர் :

(i) தொழினுட்பவியலிலான தேசிய டிப்ளோமா (மின் எந்திரவியல்)

அல்லது

(ii) எந்திரவியலிலான உயர் தேசிய டிப்ளோமா (மின் எந்திரவியல்)

அல்லது

(iii) தொழினுட்பவியலிலான தேசிய சான்றிதழ் (மின் இலத்திரனியல் எந்திரவியல்)

அல்லது

(iv) லண்டன் சிற்றி அன்ட் கில்டஸ் நிறுவனத்தின் (உரிய துறையிலான) முழுத் தொழினுட்பவியல் சான்றிதழ்

அத்துடன்

க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் சிங்களமும்/தமிழ் மொழியும், கணிதமும்/எண்கணிதமும் உட்பட ஆறு (06) பாடங்கள்

அல்லது

(v) உரிய துறையில் சமமான அல்லது உயர் அங்கீகரித்த தொழினுட்ப மட்ட தகைமைகள் (பொது நிர்வாக அமைச்சினாலும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தகைமைகள்)

அத்துடன்

மேற்குறித்த தகைமைகளில் ஒன்றுடன் உரிய துறையில் ஐந்து ஆண்டு கற்பித்தல் அத்துடன்/அல்லது செய்முறை அனுபவம்.

5.8 ஆங்கிலப் போதனாசிரியர் :

(i) ஒரு பாடமாக ஆங்கிலத்துடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பட்டம்

அல்லது

(ii) ஆங்கில மொழிமூலத்திலான பட்டம்

அத்துடன்

(iii) மேற்குறித்த தகைமைகளைப் பெற்ற பின்னர் ஆங்கிலத்தைக் கற்பித்தலிலான 3 ஆண்டு அனுபவம்.

*5.9 கணனி தொழினுட்பவியல் போதனாசிரியர் :*

(i) *அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெறப்பட்ட கணனி விஞ்ஞானத்திலான/கணனி எந்திரவியலிலான* B.SC *பட்டம்*

*அல்லது*

(ii) *அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெறப்பட்ட ஒரு முக்கிய பாடமாக கணனி பாடத்துடன்* B.SC *பட்டம்*

*அல்லது*

(iii) *அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெறப்பட்ட கணனி விஞ்ஞானத்துடன்* B.SC *(எந்திரவியல்) பட்டம்*

*அல்லது*

(iv) *அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெறப்பட்ட தகவல் தொழினுட்பவியலிலான பட்டப்பின் டிப்ளோமாவுடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெறப்பட்ட* B.SC *பட்டம்*

*5.12 உலோக வேலை போதனாசிரியர் :*

(i) *தொழினுட்பவியலிலான தேசிய டிப்ளோமா (பொறியியல் எந்திரவியல்)*

*அல்லது*

(ii) *எந்திரவியலிலான உயர் தேசிய டிப்ளோமா (பொறிமுறை-எந்திரவியல்)*

*அல்லது*

(iii) *தொழினுட்பவியலிலான தேசிய சான்றிதழ் (பொறிமுறை-எந்திரவியல்)*

*அல்லது*

(iv) *லண்டன் சிற்றி அன்ட் கில்ட்ஸ் நிறுவனத்தின் (உரிய துறையிலான) முழுத் தொழினுட்பவியல் சான்றிதழ்*

*அத்துடன்*

*க.பொ.த. (சா. த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் சிங்களமும்/தமிழ் மொழியும் கணிதமும்/எண்கணிதமும் உட்பட ஆறு (06) பாடங்கள்*

*அல்லது*

(v) *உரிய துறையில் சமமான அல்லது உயர் அங்கீகரித்த தொழினுட்பமட்டத் தகைமைகள் (பொது நிர்வாக அமைச்சினாலும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தகைமைகள்).*

*அத்துடன்*

*மேற்குறித்த தகைமைகளில் ஒன்றுடன் உரிய துறையில் ஐந்து ஆண்டு கற்பித்தல் அத்துடன்/அல்லது செய்முறை அனுபவம்.*

***குறிப்பு**.- எனினும் சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்), செயலாளர் பயிற்சி, மின் தொழில், கட்டடத் தொழில், தன்னியக்கத் தொழில், மரவேலை, தொழினுட்ப வரைதல், உலோக வேலை, இலத்திரனியல், இரத்தினக்கல் வெட்டலும் துலக்கலும் குளிரேற்றலும் வளிச்சீராக்கமும், ஏனைய எந்திரவியல் துறைகள் ஆகிய துறைகளில் மேலே* II *இல் குறிப்பிட்ட தகைமைகளைக் கொண்டிராத வேட்பாளர்கள் விண்ணப்ப முடிவுத் திகதியில் உரிய பாடத்துறையில் 5 ஆண்டுகளுக்குக் குறையாத கற்பித்தல் அல்லது கைத்தொழில் அனுபவத்தையும் அங்கீகரிக்கப்பட்ட வாண்மைத் தொழில் அல்லது தொழினுட்ப மட்டத் தகைமைகளையும் கொண்டிருப்பின் கருதப்படலாம். மேற்குறித்தவற்றுக்கு மேலதிகமாக அவர்கள் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் சிரேட்ட பாடசாலைத் தராதரப்பத்திர அல்லது க. பொ. த. (சா. த.) பரீட்சையில் கணிதமும்/எண்கணிதமும்/வர்த்தக எண்கணிதமும் சிங்களமும்/தமிழ் மொழியும் உட்பட குறைந்தபட்சம் 6 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.*

*6. உம்மால் உறுதிப்படுத்தப்பட்ட பின்வரும் ஆவணங்களின் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும் :*

(i) *பிறப்பு பதிவுச் சான்றிதழ் சமய தீட்சை சான்றிதழ் அல்லது உதவி பெறும் பாடசாலைக்கான ஒழுங்குவிதிக் கோவையின் நோக்கத்திற்கு வழங்கப்படும் பிறப்புச் சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.)*
(ii) *பட்டச் சான்றிதழ்கள் அல்லது ஏனைய கல்விச் சான்றிதழ்கள்*
(iii) *வாண்மைத் தொழில் அத்துடன் அல்லது தொழினுட்ப தகைமைச் சான்றிதழ்*
(iv) *சிங்களத்திலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் சித்தியடைந்த உயர் பரீட்சை சான்றிதழ்*

*7. அரச சேவையில் உள்ள அலுவலர்களின் விண்ணப்பங்கள் உரிய திணைக்களங்களின் தலைவர்களினூடாக அனுப்பப்பட வேண்டும்.*

*8. இவ்வர்த்தமானியின் பகுதி* I *: தொகுதி* II *(அ) இன் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள அரச சேவைகளில் உள்ள நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகளையும் 1986.08.15 ஆந் திகதிய 415 ஆம் இலக்க வர்த்தமானி பகுதி* I *இல் வெளியிடப்பட்ட இலங்கை தொழினுட்ப கல்விச் சேவையின் பிரமாணக் குறிப்பையும், உசாவுமாறு வேண்டப்பட்டுள்ளது.*

9. எல்லா விண்ணப்பதாரர்களும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடத்தப்படும் பின்வரும் கூறுகளைக் கொண்ட எழுத்துச் சோதனைக்குத் தோற்ற வேண்டும் :-

(1) பொது அறிவு - (1 மணித்தியாலம்) - புள்ளிகள் 100
(11) பொது நுண்மதி - (1 மணித்தியாலம்) - புள்ளிகள் 100

**குறிப்பு**.- இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் என்னும் மொழி மூலங்களில் நடத்தப்படும். விண்ணப்பித்த மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு அனுமதி அளிக்கப்பட மாட்டாது.

போட்டிப் பரீட்சையின் சிறப்புத் திறமை வரிசைக்கேற்ப தெரிந்தெடுக்கப்படும் வேட்பாளர்கள் ஆட்சேர்ப்பு அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தகைமைகளைப் பரிசோதிப்பதற்காக ஒரு நேர்முகப் பரீட்சையை எதிர்கொள்ள வேண்டும். (நேர்முகப் பரீட்சைக்குப் புள்ளிகள் வழங்கப்பட மாட்டா.) 40% அல்லது மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற வேற்பாளர்களின் மொத்தப் புள்ளிகளின் தகுதிக்கேற்ப ஆட்சேர்ப்புகள் நடத்தப்படும்.

10. **பாடத்திட்டம்** :

10.1 பொது அறிவு (1 மணித்தியாலம்) - தேசிய மட்டத்திலும், சர்வதேச மட்டத்திலும் பொருளாதார, சமூக, அரசியல், புவியியல், புவி விஞ்ஞான விடயங்கள் பற்றிய வேட்பாளரின் அறிவை மதிப்பிடுவதற்கு இவ்வினாத்தாள் தயாரிக்கப்படும். இவ்வினாத்தாளில் வேட்பாளர்களிடமிருந்து சரியான குறுகிய விடைகளை எதிர்பார்த்து சில வினாக்கள் தரப்படும். சரியான விடையைத் தெரிந்தெடுப்பதற்கான வேட்பாளரின் ஆற்றலை அறிவதற்கு வேறு தொகுதி வினாக்கள் பல்தேர்வு வினாக்களாகத் தரப்படும்.

10.2 பொது நுண்மதி (1 மணித்தியாலம்) - ஒரு மணித்தியாலத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ள இவ்வினாத்தாள் தர்க்கரீதியான சிந்தனைக்கும் தீர்மானம் மேற்கொள்வதற்குமான வேட்பாளரின் ஆற்றலை மதிப்பிடத் தயாரிக்கப்படும். இவ்வினாத்தாள் பல்தேர்வு வினாக்களையும் குறுகிய விடை வினாக்களையும் கொண்டிருக்கும்.

11. **பரீட்சைத் திகதி**.- இப்பரீட்சை கொழும்பு நகரத்திலும் (நகர இல. 1) யாழ்ப்பாண நகரத்திலும் (நகரம் இல. 2) 2011, மாச்சு இறுதியில் நடைபெறும். அமைச்சரவையினால் தரப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயலாளர் இப்பரீட்சையைப் பிற்போடும் அல்லது இரத்துச் செய்யும் உரிமையைக் கொண்டிருப்பார். இதற்கமைய வேட்பாளர் பரீட்சைக்குத் தோற்ற உத்தேசித்துள்ள நகரத்தின் பெயரும் இலக்கமும் விண்ணப்பப்படிவத்தில் செம்மையாகக் காட்டப்பட்டிருக்க வேண்டும். காட்டப்பட்டுள்ள நகரத்தை மாற்றுதல் அனுமதிக்கப்பட மாட்டாது.

12. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் ரூபா 500 ஆகும். அது விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்பாக எந்த மக்கள் வங்கிக் கிளையிலும் தொழினுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்குக் கணக்கு இல. 176-1001-39026228 இற்குச் செலவு வைக்கப்படுமாறு கொடுக்கப்படுதல் வேண்டும். மக்கள் வங்கியிலிருந்து பெறப்படும் பற்றுச்சீட்டு விண்ணப்பப்படிவத்தில் உரிய கூட்டில் ஒட்டப்பட வேண்டும். இக்கட்டணம் மீளிக்கப்பட மாட்டாது. வேட்பாளர் இப்பற்றுச்சீட்டின் ஒளிப்பிரதியை வைத்திருத்தல் பயனுடையது.

**குறிப்பு**.- இதற்காக முன்னர் 2009.03.06 ஆந் திகதிய வர்த்தமானி அறிவிப்புக்கமைய விண்ணப்பித்த வேட்பாளர்கள் மறுபடியும் விண்ணப்பிக்க வேண்டும். அவர்களுக்குரிய பரீட்சைக் கட்டணம் ரூ. 200 ஆகும். இது எந்த மக்கள் வங்கிக் கிளையிலும் தொழினுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்குக் கணக்கு இல. 176-1001-39026228 இற்குச் செலவு வைக்கப்படுமாறு கொடுக்கப்படுதல் வேண்டும். பெறப்படும் பற்றுச்சீட்டு விண்ணப்பப்படிவத்தில் உரிய கூட்டில் ஒட்டப்பட வேண்டும். இக்கட்டணம் மீளளிக்கப்பட மாட்டாது.

13. திறந்த போட்டிப் பரீட்சையின் சிறப்புத் திறமை வரிசைக்கேற்ப அதியுயர் புள்ளிகளைப் பெறும் வேட்பாளர்கள் உள்ள வெற்றிடங்களுக்கு ஆட்சேர்க்கப்படுவர்.

14. இளைஞர் அலுவல்கள், திறன் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் எல்லா வெற்றிடங்களையும் அல்லது சில வெற்றிடங்களை நிரப்பாமல் இருப்பதற்கான உரிமையைக் கொண்டுள்ளார்.

15. தாபனக்கோவையின் அத்தியாயம் II இன் பிரிவுகள் 10-12 இன் வாசகங்களும் 2009.02.20 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி இல. 1589/30 இல் குறிப்பிடப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளும் இப்பதவிக்கு உகந்தனவாகும்.

16. அத்தாட்சிப்படுத்தப்பட்ட கையொப்பம் உள்ள அனுமதி அட்டையைப் பரீட்சை தொடங்கும் திகதியில் பரீட்சை நிலையத்திற்குப் பொறுப்பான அலுவலரிடம் காட்ட வேண்டும்.

17. பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்படம் பரீட்சையில் பரீட்சை நிலையத்திற்குப் பொறுப்பான அலுவலருக்கு வேட்பாளரின் ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கு ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

18. வேட்பாளருக்கு அனுமதிச்சீட்டு வழங்கப்படுதல் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமையை நிறைவேற்றுவதற்காக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

19. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் சட்டமாக்கப்பட்ட பரீட்சையை நடத்தல் பற்றிய விதிகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் வேட்பாளர் உட்படுவார். அத்தகைய விதிகளையும் ஒழுங்குவிதிகளையும் மீறினால் வேட்பாளர் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உட்படுவார்.

20. வேட்பாளர்களுக்கு அனுமதி அட்டைகளை வழங்கியவுடன் பரீட்சைத் திணைக்களம் செய்தித்தாள் அறிவிப்பை வெளியிடும். விண்ணப்பதாரர் அனுமதி அட்டையைப் பெறாவிட்டால், அத்தகைய அறிவிப்பு வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் கழிந்ததும் வேட்பாளர்கள் அறிப்பில் குறிப்பிடப்பட்டவாறு பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். விண்ணப்பத்தின் உறுதிப்படுத்திய ஒளிப்பிரதி, வேட்பாளர் வைத்திருக்கும் கொடுப்பனவுப் பற்றுச்சீட்டு, பதிவு அஞ்சல் பற்றுச்சீட்டு, கொழும்புக்கு வெளியே எனின் அனுமதி அட்டையை அனுப்புவதற்காகத் தொலைநகல் எண், வேண்டுகோள் கடிதம் ஆகியவற்றுடன் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் பயனுடையதாகும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

எஸ். எஸ். ஹேவாபத்திரான,
செயலாளர்,
இளைஞர் அலுவல்கள், திறன் அபிவிருத்தி அமைச்சு.

இளைஞர் அலுவல்கள், திறன் அபிவிருத்தி அமைச்சு,
“நிபுணதா பியச”,
இல. 354/2, எல்விற்றிகல மாவத்தை,
கொழும்பு 05.
24.12.2010

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இளைஞர் அலுவல்கள், திறன் அபிவிருத்தி அமைச்சு**

*இலங்கை தொழினுட்பக் கல்விச் சேவையின் வகுப்பு III (விசேட பதவியணி) இல் உள்ள பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை -2011*

MINISTRY OF YOUTH AFFAIRS & SKILL DEVELOPMENT

Competitive Examination for recruitment of Posts in Class III (Special Grade) of the Sri Lanka Technical Education Service - 2011

| | பதவி | பதவி இல. |
|---|---|---|
| (i) சம்மதம் | | |
| (ii) சம்மதம் | | |
| (iii) சம்மதம் | | |

* வர்த்தமானி அறிவிப்பின் பந்தி 1 ஐப் பார்க்க. இவ்வுரிமையை மாற்றுவதற்குப் பின்னர் அனுமதி வழங்கப்பட மாட்டாது.

1. மொழிமூலம் :
பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(உரிய எண்ணைக் கூட்டில் காட்டுக.)

2. பரீட்சை நடைபெறும் நகரம் :
கொழும்பு - 1
யாழ்ப்பாணம் -2
(உரிய எண்ணைக் கூட்டில் காட்டுக.)

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :- | | | | | | | | | | |

முதலெழுத்துக்கள் இறுதியில் (பேரெழுத்துக்களில்) உ-ம் - SILVA A. B

2. முழுப்பெயர் :----.
(பேரெழுத்துக்களில்) :----.

3. பால் : ஆண்-0/ பெண்-1 ☐ (உரிய எண்ணைக் கூட்டில் காட்டுக.)

(அ) அரச கரும முகவரி :----.

(ஆ) தனிப்பட்ட முகவரி (பேரெழுத்துக்களில்) :----.
(அனுமதி இம்முகவரிக்கு அனுப்பப்படும்)

(இ) சொந்த தொலைபேசி எண் :----.

4. (அ) இலங்கையரா ? :----. ஆம்-1/ இல்லை-2 ☐ (உரிய எண்ணைக் கூட்டில் காட்டுக.)

5. (அ) பிறந்த திகதி :-

ஆண்டு : | | | | | மாதம் : | | | திகதி : | | |

(ஆ) தேசிய ஆளடையாள அட்டை இல. :----.

| | | | | | | | | | |

6. விண்ணப்ப முடிவுத் திகதியில் வயது :----.

வருடங்கள் : | | | மாதங்கள் : | | | நாட்கள் : | | |

7. தற்போதைய பதவி பற்றிய தகவல்கள் :

(அ) பதவியும் நியமனத் திகதியும் :----.

(ஆ) நிரந்தரமானதா ? தற்காலிகமானதா ? :----.

(இ) ஓய்வூதியமுள்ளதா, ஓய்வூதியமற்றதா ? :----.

(ஈ) பதவியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதா ? :----.

(உ) திணைக்களம் :----.

(ஊ) நிறுவகம்/பணியாற்றும் இடம் :----.

(எ) ஆண்டு திரட்டிய சம்பள அளவுத்திட்டம் :----.

(ஏ) தற்போதைய வருடாந்த திரட்டிய சம்பளம் :----.

8. கல்வித் தகைமைகள் பற்றிய விபரங்கள் (சிங்களம்/தமிழ் மொழித் தேர்ச்சி சான்றிதழ்கள் உட்பட)

| பரீட்சை | பல்கலைக்கழகம்/ நிறுவனம் | ஆண்டு | பாடங்கள் |
|---|---|---|---|
| 1.<br>2.<br>3.<br>4. | | | |

9. வாண்மைத் தொழில் தகைமைகள் பற்றிய விபரங்கள் :

| சான்றிதழ் | சான்றிதழ் வழங்கிய நிறுவனம் | ஆண்டு | பாடங்கள் |
|---|---|---|---|
| 1.<br>2.<br>3.<br>4. | | | |

10. பொதுக் கல்வித் தகைமைகளைப் பெற்ற நிறுவனங்களின் விபரங்கள் :

| கல்வி நிறுவனம் | தரம் | தொடக்கம் | வரை |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |

11. முந்திய நியமனங்கள் (செப்பமான திகதிகளுடன் காலவரண் முறைப்படி குறிப்பிட வேண்டும்.)

| திணைக்களம் நிறுவனம்/ சேவை நிலையம் | பதவி | பதவி நிரந்தரமானதா/ தற்காலிகமானதா ? | தொடக்கம் | வரை |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |
| 4. | | | | |

12. சட்ட நீதிமன்றத்தில் குற்றத் தீர்ப்புப் பெற்றவரா ? ஆம் எனின் விபரங்களைத் தருக :----.

13. அரசாங்கத் திணைக்களத்தில்/கூட்டுத்தாபனத்தில்/சபையில் பணியாற்றினால், சேவையைவிட்டு நீங்கியமைக்குக் காரணங்களைக் குறிப்பிடுக :----.

14. உமக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை எதுவும் உள்ளதா ? எனின், விவரங்களைச் சுருக்கமாகக் கூறுக :----.

| |
|---|
| இங்கு பற்றுச்சீட்டு ஒட்டப்பட வேண்டும் |

இவ்விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவையும் சரியானவையுமாகுமென இத்தால் உறுதிமொதிகின்றேன். இங்கு உள்ள எவையேனும் விபரங்கள் பொய்யானவை எனவும் பிழையானவை எனவும் தெரிந்தெடுக்கப்படுமுன்னர் காணப்பட்டால் தகுதியற்றவராக்கப்படுவேன் என்பதையும் நியமனத்திற்குப் பின்னர் காணப்பட்டால் எவ்வித நட்டஈடுமின்றிப் பதவியிலிருந்து விலக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன். மேலும் இப்பரீட்சையை நடத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அறிவிக்கப்படும் விதிகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்குமமைய நடந்துகொள்வேன் எனவும் உறுதியுரைக்கின்றேன்.

----,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :----.

**அரசாங்க, மாகாண அரசாங்க சேவையில் பதவியை வகிக்கும் வேட்பாளர்களுக்கு திணைக்களத் தலைவரின் விதப்புரை**

மேற்குறித்த அலுவலரினால் 01 தொடக்கம் 14 வரைக்கும் தரப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவையும் சரியானவையும் ஆகுமென இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திகதி :----.

1-254

**தொழில்நுட்பவியல் நிறுவனம் - மொறட்டுவைப் பல்கலைக்கழகம்**

தொழில்நுட்பவியல் தேசிய டிப்ளோமா கற்கைநெறிக்கான அனுமதி – 2011/2012

மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின், தொழில்நுட்பவியல் நிறுவனத்தினால் நடாத்தப்படும் மூன்று வருடகால முழுநேர தொழில் நுட்பவியல் டிப்ளோமா கற்கைநெறிக்குத் தெரிவுசெய்வதற்காக தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன. இக்கற்கைநெறியானது, தொழில்நுட்பவியல் நிறுவனத்திற் கான புதிய நிலையங்களில் நடத்தப்படும்வரை, மொறட்டுவைப் பல்கலைக்கழகக் கட்டிட நிலையங்களிலேயே நடாத்தப்படும்.

1. **பொது**.- தொழில்நுட்பவியற் தேசிய டிப்ளோமா கற்கைநெறி யானது இரண்டு வருட முழு நேர கற்றலையும், ஒரு வருட தொழிற்பயிற்சி யையும் உள்ளடக்கியது. இதன் கற்கைமொழி ஆங்கிலம் ஆகும். கற்கைநெறிகள் பின்வரும் கற்கைத்துறைகளில் வழங்கப்படுகின்றன :-

(அ) கப்பற்றுறை கல்வியும் தொழில்நுட்பவியலும் (வகை 1) :

(i) கடல்சார் எந்திரவியற் தொழில்நுட்பவியல் ;
(ii) கப்பற்றுறை கல்வியும் தொழில்நுட்பவியலும்.

(ஆ) ஏனைய தெரிவுகள் (வகை 2)

(i) இரசாயன எந்திரவியற் தொழில்நுட்பவியல் ;
(iii) குடிசார் எந்திரவியற் தொழில்நுட்பவியல் ;
(iii) மின்சார எந்திரவியற் தொழில்நுட்பவியல் ;
(iv) இலத்திரன் தொலைத்தொடர்பு எந்திரவியற் தொழில்நுட்ப வியல் ;
(v) பொறிமுறை எந்திரவியற் தொழில்நுட்பவியல் ;
(vi) பல்பகுதிய தொழில்நுட்பவியல் ;
(vii) புடவை மற்றும் ஆடைத் தொழில்நுட்பவியல்.

2. **தகைமைகள் :**

2.1 வயது மற்றும் பிற தகைமைகள்.- (அ) விண்ணப்பதாரிகள், 31.12.2010 ஆந் திகதியன்று 24 வயதிற்குக் குறைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

(ஆ) 31.12.2010 இல் 20 வயதிற்கு குறைந்த விண்ணப்பதாரர்களுக்கு கப்பற்துறைக் கல்வித் தொழில்நுட்வியல், கடல்சார் எந்திரவியற் தொழில்நுட்பவியல், பாடநெறிகளுக்கான அனுமதிக்கு முன்னுரிமை வழங்கப்படும். கப்பற்துறை கல்வியும் தொழில்நுட்பவியலும் (வகை 1) இற்கான விண்ணப்பதாரிகள் மருத்துவ பரிசோதனை மற்றும் நேர்முகப் பரீட்சை என்பனவற்றுக்கு விசேடமாக தோற்றுதல் வேண்டும்.

(இ) ஏதாவது பல்கலைக்கழகத்திலோ (இலங்கை திறந்த பல்கலைக் கழகம் தவிர்ந்த) உயர் கல்வி அமைச்சின் கீழ்வரும் உயர் கல்வி நிறுவனத்திலோ முழுநேர கற்கைநெறிக்கு பதிவுசெய்து கொண்டுள்ள மாணவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்கள் ஆவர்.

2.2 கல்வித் தகைமை.- விண்ணப்பதாரிகள் இலங்கை பரீட்சைகள் ஆணையாளரினால் நடாத்தப்பட்ட க. பொ. த. (உ. த.) பரீட்சையில் கீழ்குறிப்பிட்டுள்ள பாடங்களில் மூன்றிற்கு (03) குறையாமல் சித்திபெற்றிருத்தல் வேண்டும் :-

(i) இணைந்த கணிதம்
(ii) உயர் கணிதம்
(iii) பௌதிகவியல்
(iv) இரசாயனவியல்

இலங்கை பரீட்சைகள் ஆணையாளரினால் 2008 அல்லது 2009 அல்லது 2010 ஆம் ஆண்டுகளில் நடத்தப்பட்ட க. பொ. த. (உ. த.) பரீட்சைகளில் ஒன்றில் ஒரே தடவையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

3. **தெரிவு முறைமை :**

3.1 கற்கைக்கான அனுமதி.- அனுமதிக்கான தெரிவானது க. பொ. த. (உ. த.) பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையிலும், மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பவியல் நிறுவனத்தினரால் நடாத்தவிருக்கும் தகுதிகாண் பரீட்சை முடிவுகளிலும் தங்கியிருக்கும். தகுதிகாண் பரீட்சையில் சித்தி எய்தியவர்களில், க. பொ. த. (உ. த.) பரீட்சையில் அதிகூடிய பெறுபேற்றையுடையவர்கள், திறமை வரிசையில் தெரிவு செய்யப்படுவர். அதாவது இசற் மதிப்பீட்டு முறை (Z-Score) அடிப்படையாகக் கொள்ளப்படும். தெரிவுசெய்யப்படுபவர் களில் 40% இனர் திறமை அடிப்படையிலும் 60% இனர் மாவட்ட ஒதுக்கீடு முறை அடிப்படையிலும் தெரிவு செய்யப் படுவர்.

3.2 கற்கைத் துறை.- கற்கைத் துறைகளுக்கு மாணவர்களைத் தெரிவுசெய்கையில், தகுதிகாண் பரீட்சைப் பெறுபேறு, விண்ணப்பதாரியின் கற்கைத்துறை தெரிவு வரிசை என்பன இணைந்து கருத்திற்கொள்ளப்படும்.

4. **விண்ணப்பிக்கும் முறை :**

4.1 விண்ணப்பப்படிவம் :

(i) மாதிரி விண்ணப்பப்படிவம் மற்றும் தகவல்களை அரசாங்க வர்த்தமானியில் அல்லது பின்வரும் இணையதள முகவரியில் பெற்றுக்கொள்ளலாம் :

http://www.mrt.ac.lk/itum

(ii) விண்ணப்பப்படிவமானது, கடித உறையின் இடது மேல் மூலையில் ''NDT Admission 2011/ 2012'' என ஆங்கிலத்தில் குறிக்கப்பட்டு, ''பிரதிப் பதிவாளர், தொழில்நுட்பவியல் நிறுவனம், மொறட்டுவை பல்கலைக் கழகம், கட்டுப்பெத்த, மொறட்டுவை'' என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

(iii) விண்ணப்பப்படிவமானது விண்ணப்ப முடிவுத் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ பிரதிப் பதிவாளர், தொழில்நுட்பவியல் நிறுவனம், மொறட்டு வைப் பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு வந்தடைதல் வேண்டும்.

(iv) இரண்டு 9" x 4" முத்திரை ஒட்டிய கடித உறையில், (பெறுமதி 40 ரூபா) உங்களது சுய விலாசத்தை எழுதி விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்படுதல் வேண்டும்.

(v) விண்ணப்பங்கள் பூர்த்தியாக்கப்பட்டு, விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டவாறு உள்ளடக்கப்பட்டவை உறுதிப்படுத்தப்பட்டு அனுப்பப்படல் வேண்டும். மூல அல்லது பிரதி ஆவணங்கள் தேவையில்லை (விண்ணப் பப்படிவத்தில் 3, 4 மற்றும் 5 ஆம் பந்திகளைப் பார்க்க.)

4.2 கற்கை நெறிக்கான முன்னுரிமை :

(i) இரண்டு வகை கற்கை நெறிகள் உள்ளன.

(ii) விண்ணப்பதாரிகள் கப்பற்துறைசார் கற்கை நெறி (வகை 1) அல்லது ஏனைய கற்கை நெறி (வகை 2) அல்லது இரண்டிற்கும் விண்ணப்பிக்கலாம். இரண் டிற்கும் விண்ணப்பிக்குமிடத்து உங்கள் விருப்பு வரிசையை தெரியப்படுத்தல் வேண்டும்.

(iii) 'வகை 1' இல் முதலாவது விருப்பு 1 எனவும் இரண்டாவது விருப்பு 2 எனவும் குறிப்பிடுக. கப்பற்துறைசார் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் மாத்திரம் இதனை நிரப்புதல் வேண்டும்.

(iv) 'வகை 2' இல் முதலாவது விருப்பு 1 எனவும் இரண்டாவது விருப்பு 2 என்றவாறு உங்கள் விருப்புகளை (1, 2, 3, 4, 5, 6, 7) என குறிப்பிடுக.

5. (i) **விண்ணப்பக் கட்டணம்.**- ஏதாவதொரு வகை கற்கைநெறிக்கு ரூ. 300 (முந்நூறு ரூபா) உம், இரண்டு வகைகளுக்கும் சேர்த்து விண்ணப்பிக்க விரும்பினால் ரூ. 500 (ஐநூறு ரூபா) உம் ஆகும். இதனை ஏதாவதொரு இலங்கை வங்கிக் கிளையில் மட்டும் "தொழில்நுட்பவியல் நிறுவனம், மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் இலங்கை வங்கி, கட்டுபெத்தை கிளையில் உள்ள கணக்கு இல. 0000308280" க்கு செலுத்தி பெறப்பட்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்பி வைக்கவும். விண்ணப்பக் கட்டணம் திருப்பிச் செலுத்தப்படமாட்டாது.

(ii) விண்ணப்ப முடிவுத் திகதி.- விண்ணப்ப முடிவுத் திகதியானது 2011, மாசி மாதம் 15 ஆந் திகதியாகும். (15.02.2011)

6. **தகுதிகாண் பரீட்சை.**- ஒவ்வொரு மாவட்டத்திலும், அம்மாவட்டத்திற்குரிய க. பொ. த. (உ. த.) பரீட்சைப் பெறுபேற்றுக்கமைய நிரல்படுத்தப்பட்டு அதிகூடிய பெறுபேற்றையுடைய விண்ணப்பதாரி களே தகுதிகாண் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். இப்பரீட்சை தொழில்நுட்பவியல் நிறுவனம், மொறட்டுவை பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும்.

7. **பதிவு செய்தல்.**- (i) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் கற்கைநெறிக்குப் பதிவுசெய்வதற்காக பின்வரும் சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும் :-

* க. பொ. த. (உ. த.) சான்றிதழ் ;
* க. பொ. த. (உ. த.) இசற் மதிப்பீடு (Z Score) ;
* பாடசாலை விலகற் சான்றிதழ் ;
* பிறப்புச் சான்றிதழ் பத்திரம்/சான்றிதழ்களில் பெயர் மாற்றம் ஏதும் இருப்பின், சத்தியக்கூற்று இணைக்கப்பட வேண்டும்.

8. **முக்கிய கவனத்திற்கு.**- (i) ஒரு பரீட்சார்த்தி தேசிய தொழில் நுட்பவியல் டிப்ளோமா கற்கைநெறிக்குப் பதிவுசெய்யப்பட்டதும் அக்கற்கைநெறிக் காலத்தின்போது இந்த பல்கலைக்கழகத்திலோ இலங்கையின் வேறு எந்தப் பல்கலைக்கழகத்திலோ (இலங்கை திறந்த பல்கலைக்கழகம் தவிர்ந்த) உயர் கல்வி அமைச்சின்கீழ் வரும் எந்த ஒரு நிறுவனத்திலோ வேறு எந்த கற்கை நெறியையும் பயில்வதற்கு அனுமதி பெறுவதற்குத் தகுதியற்றவராவார்.

(ii) ஏதாவது பல்கலைக்கழகத்திலோ (இலங்கை திறந்த பல்கலைக்கழகம் தவிர்ந்த) உயர் கல்வி அமைச்சின்கீழ் வரும் உயர் கல்வி நிறுவனத்திலோ பதிவுசெய்து கொண்டுள்ள முழுநேர மாணவர்கள் தேசிய தொழில்நுட்பவியல் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள் ஆவர்.

பணிப்பாளர்.

தொழில்நுட்பவியல் நிறுவனம்,
மொறட்டுவைப் பல்கலைக்கழகம்,
2010.02.31.

## SPECIMEN APPLICATION FORM

### Application for Admission to the National Diploma in Technology Course – Academic Year 2011/2012

INSTITUTE OF TECHNOLOGY - UNIVERSITY OF MORATUWA

| | *For office use only* | | | | |
|---|---|---|---|---|---|
| | Application No. | | | | |
| | District | | | | |

Application (For Please tick ( ✓)) -

(a) Maritime Fields - (SET 1) ☐

(b) Other Fields - (SET 2) ☐

[Applicants may apply for single set (Set 1 or Set 2) or both sets (Set 1 and Set 2)]

01. Personal Details (Please Use **BLOCK CAPITALS**)

Name in Full :

(Leave one blank cage between names)

Name with Initials :

(Leave one blank cage between names)

| Title | Mr./Ms. | | Sex | Male/Female | | |
|---|---|---|---|---|---|---|
| Age | (Years) | (Months) | Date of Birth | Date | Month | Year |
| As at 31st Dec. 2009 | | | | | | |
| National ID Number | | | | | | |

02. Contact Details :

Address (Residence):

(Leave one blank cage between different segments of the address)

| | |
|---|---|
| Telephone | |
| Mobile | |
| E-mail (if available) | |

03. Results of G. C. E. (Advanced Level) Examination :

| *Subjects & Details of Examination* | *Grades & Details obtained at the* | | |
|---|---|---|---|
| | *1st attempt* | *2nd attempt* | *3rd attempt* |
| Year | | | |
| Physics | | | |
| Chemistry | | | |
| Combined Mathematics | | | |
| Advanced Mathematics | | | |
| Index Number | | | |
| Z-Score | . | . | . |
| Medium | Sinhala/Tamil/English (Delete whatever is inapplicable) | | |

| | |
|---|---|
| Results of the year to be considered for Selection (indicate whether 2008 or 2009 or 2010) | |

04. School(s) attended from Year 11 to 13 :

| *Year* | *Name & Address of School* | *District* | *Period of Attendance* | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | *From* | | | *To* | | |
| | | | *Y* | *M* | *D* | *Y* | *M* | *D* |
| 11 | | | | | | | | |
| 12 | | | | | | | | |
| 13 | | | | | | | | |
| 1st Attempt | | | | | | | | |
| 2nd Attempt | | | | | | | | |
| 3rd Attempt | | | | | | | | |

05. Certification of Results and Schools attended :

It is compulsory to certify the Results under No. 03 and Details under No. 04 in the application by the School Principal for the School Candidates and by a Justice of Peace for External Candidates.

I certify that the particulars given above by the candidate in the cage No.03 and 04 are true and accurate according to the Original Certificates.

Name of the Principal/Justice of Peace : (Rev./Dr./Mr./Mrs.) ..................................................................................

Official Seal

......................., .....................
Signature Date

06. Field Preference :

*Set 1* - Insert order of preference as 1 for First preference and 2 for Second preference. This should be completed only by the candidates who have applied for Maritime Studies.

*Set 2*- Insert order of preference as 1, 2, 3, 4, 5, 6, 7. '1' for the "Most Preferred", '2' for the next and so on,'7' for the last preferred.

| *Set 1* | |
|---|---|
| *Maritime Fields* | *Order* |
| Marine Engineering Technology | |
| Nautical Studies and Technology | |

| *Set 2* | |
|---|---|
| *Other Fields* | *Order* |
| Chemical Engineering Technology | |
| Civil Engineering Technology | |
| Electrical Engineering Technology | |
| Electronic & Telecommunication Engineering Tcehnology | |
| Mechanical Engineering Technology | |
| Polymer Technology | |
| Textile & Clothing Technology | |

| State Priority, if applied for both sets (Please tick (✓)) |
|---|
| SET 1 |
| SET 2 |

| | *Yes* | *No.* |
|---|---|---|
| Are you registered as a fulltime student in any other University under the UGC (other than Open University) or any other Higher Educational Institution under the Ministry of Education ? (Delete whatever is inapplicable) | | |

Applicant's Declaration :

(1) I declare that I am not a fulltime registered student at any University (except Open University of Sri Lanka) or any Higher Educational Institution under the Ministry of Education.

(2) I certify that all the particulars given by me in this Application are true and accurate. I am aware that if the particulars given by me in this Application are found to be false or inaccurate prior to my admission I will be discontinued from the course.

(3) In the event of my being selected for admission after the Test, I shall abide by the Statutes, By-Laws, Regulations and the Rules of the Institute of Technology, University of Moratuwa, in so far as they are applicable to me.

(4) I have pasted the Cash deposit/ Cash transfer receipt obtained from Bank of Ceylon, drawn in favour of "Institute of Technology, University of Moratuwa - Account No. 0000308280 of Bank of Ceylon, Katubedde Branch".

(5) I also enclose a self-addressed stamped envelope (Rs. 40 worth) in size 9" x 4".

(6) I am aware that if I am found to be registered in another University or any other Higher Educational Institution under the Ministry of Education at the time of sitting for the Aptitude Test for the National Diploma in Technology Course, I will not be selected for the Course.

----,
Signature of Applicant.

Date :-----.

| |
|---|
| Paste your Cash Deposit/Cash Transfer Original Slip here. |

1-274